**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**8 |
| Name | : | **முகமது உசைன்** |
| Father's / Husband Name | : | **ஜமால் பாட்ஷா** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 62/2025 |

**தேதி : 28.05.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் திட்ட இயக்குநராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று பெரம்பலூரில் வசித்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் பெரம்பலூர் Child Line Care ல் இயக்குநராக பணிபுரிந்தேன். 02.06.2020ம் தேதி Child Line Care எண்ணிற்கு இரண்டு சிறார்கள் ஆடு மேய்ப்பதாக தகவல் வந்தது. மேற்படி தகவல் குறித்து எங்களுடைய உறுப்பினர்கள் திவ்யா, பட்டு, சத்தியராஜ் ஆகியோர்கள் பொம்மனப்பாடி கிராமத்திற்கு சென்று விசாரித்து தகவல் உண்மை என தெரிந்துகொண்டு வந்தார்கள். அதன்பிறகு இதுகுறித்து 08.06.2020 அன்று லேபர் டிபார்ட்மெண்ட்டிற்கு தகவல் தெரிவித்தோம். மேற்படி அன்றே நான் என்னுடன் பணிபுரியும் திவ்யா, பட்டு, சத்தியராஜ் மற்றும் ஆர்.டி.ஓ., தாசில்தார், ஆர்.ஐ., வி.ஏ.ஓ., லேபர் டிபார்ட்மெண்டை சேர்ந்த பாஸ்கர், சாந்தி ஆகியோர்கள் பொம்மனப்பாடி கிராமத்திற்கு சென்று விசாரணை செய்தோம். விசாரணை செய்ததில் ஒரு சிறுவன் பெயர் முருகன், வயது 13 ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், மற்றொரு சிறுவனின் பெயர் மதிவாணன், வயது 10, திருச்சி

மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது. மேலும் ரூ.60,000/–ஐ எதிரி கண்ணன் என்பவர் மேற்படி சிறுவர்களின் பெற்றோர்களிடம் கொடுத்து ஆடு மேய்ப்பதற்காக அழைத்து வந்திருந்தார் என்று தெரியவந்தது.

சிறுவர்கள் இருவரும் மீட்கப்பட்டு குழந்தைகள் நல பிரிவில் ஒப்படைத்தோம். சம்பவம் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் சசிகலா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இவ்வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

02.06.2020 அன்று காலை 10.00 மணி அளவில் எங்களுக்கு சிறுவர்கள் ஆடு மேய்ப்பதாக தகவல் வந்தது. சிறுவர்கள் எந்த சமூகத்தை சார்ந்தவர்கள் என்று போலீஸார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சிறுவர்களின் வயதை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் ஆதார் கார்டின் மூலம் தெரிந்துகொண்டேன். சம்பவ இடத்திற்கு நான் சென்றேன். சம்பவ இடத்தில் சிறிய மலை குன்று இருந்தது. சுற்றிலும் காடாக இருந்தது. சம்பவ இடத்தில் சிறுவர்கள் வெள்ளாடு மற்றும் குரும்பாடுகள் மேய்த்துக்கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் குடிசை வீடுகள் மற்றும் ஆஸ்பட்டாஸ் ஓடு வீடுகள் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணைக்கு பிறகுதான் சிறுவர்களின் பெற்றோர்கள் வந்தார்கள். சம்பவ இடத்திற்கு சென்றபோது அருகில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சிறுவர்களை நான் விசாரிக்கவில்லை. ஆர்.டி.ஓ, தாசில்தார் ஆகியோர் விசாரித்தார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.